# சத்தியமங்கலம் நகராட்சி

**2022 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2022 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

பொருள் : 1

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் அக்டோபர் 2022 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந. க. எண். 528/2022/சி1)

தீர்மானம் எண் : 189 பதிவு செய்யப்பட்டது நாள் 31.10.2022

பொருள் : 2

திரு.Er.C.P.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் தான் 2015–ம் ஆண்டு பழைய பேருந்து நிலைய கடைகள் கட்டும் பணி செய்து கொடுத்த பொழுது பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.2,91,615/– யை மற்றும் நகராட்சியில் உள்ள வைப்புத் தொகை திரும்ப வழங்க கேட்டுள்ளார். இத்தொகையானது காலாவதி வைப்புத் நிதிப் பதிவேட்டில் உள்ளதால் திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ரூ.2,91,615/–ல் உள்ள தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந. க. எண். 2266/2022/அ3)

தீர்மானம் எண் : 190 ரூ.2,91,615/– திரும்ப வழங்க அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.2022

பொருள் : 3

திருமதி.ரேவதி, க/பெ.தர்மராஜ் ஒப்பந்ததாரர் தனது கணவர் இறந்ததால் அவர் பெயரில் உள்ள வைப்புத் தொகை திரும்ப வழங்க கேட்டுள்ளார். இத்தொகையானது காலாவதி வைப்புநிதி பதிவேட்டில் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் தொகை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : திருமதி. ரேவதி, க/பெ. தர்மராஜ் என்பவர் செலுத்தி உள்ள வைப்புத் தொகை ரூ.25,000/– ஐ ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந. க. எண். 1968/2022/அ3)

தீர்மானம் எண் : 191 ரூ.25000/– திரும்ப வழங்க அனுமதிக்கப்பட்டது 31.10.2022

பொருள் : 4

அ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண. 27519- 52/2021/பி 2 நாள். 23.09.2022 இன்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கரட்டூர் ரோடு ( பூ மார்க்கெட் முதல் நகராட்சி எல்லை வரை) மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் திட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதில் அரசு மான்யம் ரூ.2.00 இலட்சம் மற்றும் பொது மக்கள் பங்களிப்பு தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும். பெறப்பட்ட ஆணை நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ஆ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணிக்கு முறையே தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 11.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Thiru.S.R. Moorthy, Contractor, Sathyamangalam. | ரூ.3.00 இலட்சம் | ரூ.2,49,891/- | மதிப்பீடு தொகையினை விட 0.05% குறைவு |
| 2 | Thiru. Vino Constructions, Contractor, Sathyamangalam. | | ரூ.2,50,074/- | மதிப்பீடு தொகையினை விட 0.07% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Thiru.S.R. Moorthy, Contractor, Sathyamangalam என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய Thiru.S.R. Moorthy, Contractor, Sathyamangalam அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம்.
3) இப்பணி திட்டப்பணி என்பதால் நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மற்றும் பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண். 2123/2022/இ1)

**தீர்மானம் எண் : 192 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து சேகரம் செய்து மக்கும் குப்பைகளை MCC மற்றும் Windrows முறையில் உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதர உலர் கழிவுகளான பிளாஸ்டிக், செருப்பு, லெதர், ரெசின்கவர், பேக்ஸ் போன்றவை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு உபஎரிபொருளாக அனுப்பபட்டு வருகிறது. இதைத்தவிர நகரில் தினசரி சேகரமாகும் டயப்பர், நாப்கின்கள், வாழை சருகுகள், சிறிய குச்சிகள் மற்றும் தினசரி மறு சுழற்சி செய்ய இயலாத inert பொருட்களை Incinerator Plant நகராட்சி உரப்பூங்காவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இயந்திரம் நிறுவ தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்திடம் உரிய உரிமம் CTE ( Consent to Establish) வாங்க வேண்டியுள்ளதால் பூர்வாங்க பணிகள் திட்டத்தின் வடிவமைப்பு, கட்டிட வரைப்படம், டோப்போ வரைப்படம், ஆடிட்டர் சான்று மற்றும் இதர மாசு கட்டுப்பாட்டு வாரிய தொடர்பான ஆவணங்கள் தயார் செய்ய திட்ட தனியார் ஆலோசகர் நியமிக்கப்பட வேண்டும். இதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/- ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 1354/2019/இ1)

**தீர்மானம் எண் : 193 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சியில் செயல்பட்டு வரும் ஆடுவதை சாலைக்கு உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 2022-2023 ம் ஆண்டிற்கான உரிமம் பெற ஆகும் செலவினம் ரூ. 3,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 2157/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 194 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.27 இல் ரங்கசமுத்திரம் சந்து எண்.7 முதல் 10 வரை உள்ள சந்துகள் உள்ள சிமெண்ட் தளம் பழுதாகி நடக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் தேசிய நெடுஞ்சாலையை விட தாழ்வாக உள்ளதால், முதியோர்கள், சிறுவர்கள் இந்த இடத்தினை கடக்கும் போது அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. இச்சாலை அமைத்து பல வருடங்களுக்கு மேலாகி விட்டது. எனவே, இப்பகுதியில் சாய்வு தளம் அமைத்து தர வேண்டி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 195 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட 22 வது வார்டு கடை வீதியில் நிர்மலா தியேட்டர் செல்லும் வழியில் அங்கு விலாஸ் கடை அருகில் உள்ள இரண்டு மோரிகளும் உடைந்து விட்டது. இதனால் அந்த இடத்தில் வாகனங்கள் விபத்துக்கள் ஏற்படுகிறது. மக்கள் பாதுகாப்பின்றி இருக்கின்றனர், எனவே, இப்பகுதியில் தடுப்பு சுவர் கட்டி தரக்கோரி 22–வது வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள், எனவே, இப்பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.0.85 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 196 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 9

சத்தியங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.7 இல் மழை நீர் வடிகால் இல்லாததால் மழை நீர் சரியான வழிபாதை இல்லாமல் சாலையின் நடுவில் செல்கிறது. இதனால் மழை காலங்களில் மழை நீர் தேங்கி அதிக அளவில் விஷ ஜந்துக்கள் வருகிறது. மேலும், கொசு முட்டைகள் உற்பத்தியாகி பலவிதமான விஷ காயச்சல் பரவி வருவதாக அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் ஆகியோர்களால் அடிக்கடி

புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, போர்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிதாக சிறுபாலம் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.2.10 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 197 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

**பொருள் : 10**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.18 சின்ன தேவாங்கபுரம் மில் ரோடு பகுதியில் பொதுமக்கள் தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள் எனவே, ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பிற பகுதிகளுக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 198 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

**பொருள் : 11**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.11 வண்டிப்பட்டறை பகுதியில் கடந்த 40 ஆண்டுகளாக சுமார் 35 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இந்நிலையில் அவர்களுக்கு அடிப்படை வசதிகளான சாக்கடை வடிகால், தார் சாலை வசதி மற்றும் குடிநீர் வசதியை செய்து தருமாறு வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பகுதிக்கு சாலை வசதி இல்லாததால் மழை காலங்களில் இருசக்கர வாகனங்கள் அடிக்கடி சேற்றில் சிக்கி விடுவதாக அப்பகுதி பொதுமக்கள் மற்றும் மன்ற உறுப்பினர் அவர்களின் கடித்தில் புகார் தெரிவித்துள்ளார்கள். எனவே, போர்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிதாக சிமெண்ட் சாலை அமைக்க உத்தேச செலவினம் ரூ.6.20 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 199 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.22 இல் பண்ணாரி ரோடு முதல் பழைய தபால் ஆபீஸ் வீதி ரோடு வரை மழை நீர் வடிகால் இல்லாததால் மழை நீர் சரியான வழிபாதை இல்லாமல் சாலையின் நடுவில் செல்கிறது. இதனால் மழை காலங்களில் மழை நீர் தேங்கி அதிக அளவில் விஷ ஜந்துக்கள் வருகிறது, மேலும், கொசு முட்டைகள் உற்பத்தியாகி பலவிதமான விஷ காய்ச்சல் பரவி வருவதாக அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் அடிக்கடி புகார்கள் அளித்த வண்ணம் உள்ளார்கள். மேலும், இங்குள்ள மிகவும் பிரசித்தி பெற்ற பெருமாள் மற்றும் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வரும் பக்தர்களும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, போர்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிதாக படிகள் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.5.90 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 200 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 13

சத்தியங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.21 இல் பண்ணாரி ரோடு சங்கம் மருந்து கடை எதிரில் பொதுமக்கள் செல்ல சரியான பாதை வசதி இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இப்பகுதியானது தார் சாலை விட சுமார் 5 அடி பள்ளத்தில் உள்ளதால் இப்பகுதியில் சாய்வு தளம் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் ஆகியோர்களால் அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, போர்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிதாக படிகள் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.0.55 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 201 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.7, 8 பகுதிகளில் பொதுமக்கள் தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள் எனவே, ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பிற பகுதிகளுக்கு குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதிக்கு பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 202 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.19 இல் முனியப்பன் கோவில் வீதியில் முனியப்பன் கோவில் அருகில் மழை நீர் வடிகால் இல்லாததால் மழை நீர் சரியான வழிபாதை இல்லாமல் சாலையின் நடுவில் செல்கிறது. இதனால் மழை காலங்களில் மழை நீர் தேங்கி அதிக அளவில் விஷ ஜந்துக்கள் வருகிறது. மேலும், கொசு முட்டைகள் உற்பத்தியாகி பலவிதமான விஷ காயச்சல் பரவி வருவதாக அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வார்டு உறுப்பினர் ஆகியோர்களால் அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, போர்கால அடிப்படையில் சரி செய்யும் பொருட்டு புதிதாக சிறுபாலம் மற்றும் மழை நீர் வடிகால் அமைக்க உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 203 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட சத்தி–1 நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய கட்டிடம் கட்டப்பட்டு 50 வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும், பள்ளி மாணவர்கள் அதிக அளவில் வகுப்புகளுக்கு வந்து பாடங்கள் பயின்று வருகிறார்கள். இதனால் மாணவர்கள் பாடம் படிக்க போதுமான இட வசதி இல்லை, மேலும் காற்றோட்டமாக வகுப்பு அறைகள் இல்லாததால் கூடுதலாக முதல் மாடி உட்பட நான்கு வகுப்பறைகள் கட்டி தருமாறு தலைமை ஆசிரியர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே,

பள்ளி மாணவர்களின் நலன் கருத்தில் கொண்டு கூடுதல் கட்டிடம் கட்ட உத்தேச செலவினம் ரூ.35.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 204 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட நகராட்சி குப்பை கிடங்கில் புதியதாக எரியூட்டுகூட கட்டிடம் அமைக்கும் (Incineator) பொருட்டு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தில் CTE (Consent to Establish) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு விண்ணப்ப கட்டணம் ரூ.10,000 –/– ஐ செலுத்தும் பொருட்டு வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.1354/2019/இ1)

**தீர்மானம் எண் : 205 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.6 இல் தண்ணீர் வசதி இல்லாமல் அப்பகுதி பொதுமக்கள் நீண்ட துரத்திற்கு சென்று தண்ணீர் எடுத்து வருகிறார்கள். பொதுமக்களின் நலன் கருத்தில் கொண்டு ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் இருந்து வீதிகளுக்கு குழாய் விஸ்தரிப்பு செய்து தரக்கோரி நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, குடிநீர் விநியோக பணி அவசர அவசியம் கருதி குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 206 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 19

சத்தியமங்கலம் பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம், எஸ்.ஆர்.டி.கார்னர், கோம்புபள்ளம் மற்றும் கட்டபொம்மன் நகர் ஆகிய பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்பட்ட குடிநீர் வால்வு தொட்டி பழுதடைந்து குடிநீர் கசிந்து வீணாக செல்கிறது. மேலும், கட்டுமான பழுதடைந்து உடைந்த பகுதிகள் கேட்வால்வு மீது விழுந்து கேட்வால்வு சேதம் ஆகிவிடுகிறது. எனவே, குடிநீர் வால்வு தொட்டி பழுது சரி செய்து தருமாறு திரு.கௌதம் குழாய் திறப்பாளர், சத்தியமங்கலம் நகராட்சி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி குடிநீர் விநியோகம் சீராக செயல்படுத்தும் பொருட்டு கேட்வால்வு தொட்டி பழுது சரி செய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 207 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கோவை ரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு பின் பக்கம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் பொதுமக்கள் மற்றும் சமூக விரோதிகள் இடத்தினை தற்காலிகமாக ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். இதனை தடுக்கும் பொருட்டு அப்பகுதியில் கம்பி வேலி அமைத்து நகராட்சி இடத்தினை பாதுகாக்க வேண்டுமாறு நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பணியின் முக்கியத்துவம் கருதி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.20 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 208 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 21

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.9 உருமையன் வீதி, திருநீலகண்டர் வீதி, வாணியர் பிள்ளையார் கோவில் வீதி மற்றும் இதர குறுக்கு வீதியில் மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்கு மேலாகி விட்டதால் அடிக்கடி வடிகால் பழுது ஏற்பட்டு கழிவு நீர் சாலையின் நடுவில் செல்கிறது. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அங்குள்ள குடியிருப்பு வாசிகளுக்கு அடிக்கடி காய்ச்சல் ஏற்படுகிறது. எனவே, போர்கால அடிப்படையில் மழை நீர் வடிகால் பழுது சரி செய்து தரக்கோரி நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெவித்துள்ளார்கள். எனவே, மழை நீர் வடிகால் பழுது பார்க்க உத்தேச மதிப்பீடு ரூ.4.00

இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 209 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.16 மூன்று ஆழ்குழாய் மோட்டர் உள்ளது. இந்த ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர் உள்ளது. பாக்கியலட்சுமி நகர், சாரு வித்யா பள்ளி வீதி, பத்திரகாளியம்மன் கோவில் வீதி ஆகிய பகுதியில் தண்ணீர் வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, இப்பகுதிகளுக்கு தண்ணீர் வசதிகள் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 210 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.25 Extension Street வீதியில் உள்ள சாலை மிகவும் தாழ்வு பகுதியாக உள்ளதாகவும், மழை நீர் பிற பகுதிகளுக்கு செல்ல முடியாமல் தண்ணீர் தேங்கியிருப்பதாகவும், மழை நீர் வெளியேற முடியாமல் உள்ளதாகவும், இந்த இடத்தில் சிறுபாலம் அமைத்து மழை நீர் உரிய வழிதடத்தில் செல்ல ஆவண செய்யுமாறு மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, மழை காலம் என்பதால் போர்கால அடிப்படையில் சிறுபாலம் கட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 211 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 24

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர் மன்ற கூட்ட அரங்கில் போதிய நாற்காலி, டேபிள், மைக்செட் மற்றும் இதர வசதிகள் இல்லாததால் நகர் மன்ற கூட்டம் நடத்துவதற்கு மிகவும் சிரம்மாக உள்ளது. மேலும், நாற்காலிகள் கொள்முதல் செய்யப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும், ஒலி பெருக்கி இல்லாமல் நகர் மன்ற கூட்ட அரங்கில் நகர் மன்ற தலைவர், உறுப்பினர் மற்றும் அதிகாரிகள் தெரிவிக்கப்படும் கருத்துகள் சரியாக கேட்க முடியாத நிலை உள்ளது. ஆகவே, நகர் மன்ற கூட்டம் நடத்துவதற்கு புதியதாக ஒலி பெருக்கி மற்றும் நாற்காலிகள், இதர வசதிகள் செய்யும் பொருட்டு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 212 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 25

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31117/2021/CFC நாள்.14.10.2022 இல் 2021–2022 ஆம் ஆண்டு 15 வது நிதிக்குழு மானியம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட UNTIED Grant நிதியில் தெருவிளக்குகளை கொள்முதல் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதில் புதியதாக 396 எல்.இ.டி தெருவிளக்குகள் ரூ.34.90 இலட்ச நிதியில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த கடிதம் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. கீழ்கண்டவாறு லைட்டுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| Sl.No | Name of Work | No of Lights | Amount |
|---|---|---|---|
| 1 | A) LED Street Light Fitting alone | 73 Nos | Rs.34.90 Lakhs |
| | b)LED Street Light with EB Line | 259 Nos | |
| | c) LED Street lights with EB Pole and EB Line | 64 Nos | |
| | Total | 396 Nos | |

மேற்கண்டவாறு தெருவிளக்கு அமைக்க நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) திட்ட நிதி போக மீதமுள்ள செலவினங்களுக்கு நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1770/2021/இ1)

**தீர்மானம் எண் : 213 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

பொருள் : 26

சத்தியமங்கலம் நகராட்சி உட்பட்ட ராஜீவ் நகர் பகுதி வார்டு–டி, பிளாக்–23 சர்வே எண்.84 நகராட்சி பூங்காவில் ஒதுக்கப்பட்ட இடத்தை ஒட்டி அங்குள்ள குடியிருப்பு வாசிகள் சென்று வரவும் பொதுமக்கள் ஆற்றிற்கு செல்லவும், புரதான நினைவு சின்னமான திப்புசுல்தான் கோட்டை மதில் சுவர் உள்ளதாலும், மேலும், பழைய நகர வரைப்படத்தில் கால்நடை பாதை என்று உள்ளதாலும், அப்பாதை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளும் வண்ணம் வார்டு–டி, பிளாக் எண்.23 ,சர்வே எண்.86 பூங்கா இடத்தை ஒட்டியுள்ள நடைபாதை வடபுறம் 9.10 மீ அகலகத்திற்கு, தென்புறம் 12.00 மீ அகலத்திற்கு,இ தன் தென்வடல் நீளம் 39.20 மீ சர்வே எண்.86 கிழக்குபுறம் உள்ள பாதையை பொதுமக்கள் நலனுக்காக பயன்படுத்தி கொள்ள அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஏற்கனவே வடபுறமுள்ள 5.40 மீ அகலத்திற்கு பதிலாக பூங்கா இடத்தில் 3.70 மீ அகலம் சேர்த்து 9.10 மீ அகல பாதையை பயன்படுத்தி கொள்ள நகர் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 214 அனுமதிக்கப்பட்டது. நாள் 31.10.22**

**ஆணையாளர்**
**சத்தியமங்கலம் நகராட்சி.**